# <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி</u>

**அசல் வழக்கு எண் 135/2014**

பெயர் : தங்கவேல் நாள் : 13.12.2022

வா.சா.1 – 5 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி

வா.சா.1 – தங்கவேல் - சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

வா.சா.ஆ.25 ன் நடவடிக்கைகளுக்கு பிறகு என் தாத்தா கொழந்தாகவுண்டருக்கும், 5 ம் பிரதிவாதியின் தகப்பனார் ஆறுமுககவுண்டருக்கும் மாரிகவுண்டர் மகன் காளியண்ணகவுண்டருக்கும் இடையே மற்றொரு பாகப்பிரிவினை ஏற்பட்டதாக வழக்குரை மற்றும் முதன்மை சாட்சியத்தில் கூறியுள்ளேனா என்றால், இல்லை. வா.சா.ஆ.25 ஆவணத்திற்கு பிறகு எனது தாத்தா கொழந்தாகவுண்டர் புல எண் 94 ல் கிரையம் எதுவும் பெற்றதாக வழக்குரை மற்றும் முதன்மை சாட்சியத்தில் குறிப்பிடவில்லையென்றால், சரிதான். வா.சா.ஆ.25 ஆவணப்படி எனது தாத்தா கொழந்தாகவுண்டருக்கு பட்டா வழங்கப்பட்ட புல எண் 95/5 ல் புஞ்சை ஹெக்டேர் 0.18.5 க்கான பட்டா நில உடமை மேம்பாட்டுத் திட்டத்தின்போதும், அதே புல எண்ணில் அதே விஸ்தீரணத்தில் எனது தாத்தாவிற்கு வழங்கப்பட்டது என்றால், சரிதான். வா.சா.ஆ.25 ஆவணப்படி புல எண் 94/22 ல் பு.ஹெக்டேர் 0.02.0 க்கு விஸ்தீரணத்திற்கு வழங்கப்பட்ட பட்டாவானது நில உடமை மேம்பாட்டு திட்டத்தின்போது எந்த அடிப்படையில் புல எண் 94 ல் புல எண் 94/12**B** ல் புஞ்சை ஹெக்டேர் 0.01.0, 94/13**C** புஞ்சை ஹெக்டேர் 0.05.5, புல எண் 94 ல் 13**D** புஞ்சை ஹெக்டேர் 0.01.5 மற்றும் புல எண் 94/14**A** ல் புஞ்சை ஹெக்டேர் 0.07.0 என நான்கு இடங்களுக்கு அதிக விஸ்தீரணத்திற்கு வழங்கப்பட்டது என எனது வழக்குரை மற்றும் முதன்மை சாட்சியத்தில் குறிப்பிடவில்லை என்றால், சரிதான். அது அனுபவத்தின் அடிப்படையில் வழங்கப்பட்டது. மேற்கண்டவாறு அனுபவத்தின் அடிப்படையில் வழங்கப்பட்டது என்பதை வழக்குரை மற்றும் முதல் விசாரணையில் குறிப்பிட்டு கூறவில்லையென்றால், சரிதான். அதேபோல் எந்த வருடத்திலிருந்து எனது தாத்தா கொழந்தாகவுண்டர் யாருக்கு பாத்தியப்பட்டிருந்த மேற்படி நிலங்களை எந்த அடிப்படையில் அனுபவம் செய்து வந்தார் என்ற விபரத்தினை வழக்குரை மற்றும் முதன்மை சாட்சியத்தில் கூறவில்லையென்றால், சரிதான்.

2) வா.சா.ஆ.25 ஆவணத்திற்கு பின்னிட்டு சர்வே எண் 94ல் 25 ஏர்ஸ் நிலம் மூன்று இடங்களில் அதிகப்படியாக வந்துள்ளது என்றால், சரிதான். நில உடமை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பட்டா வழங்குவதற்கு முன்பாக எனது தாத்தா கொழந்தாகவுண்டருக்கு கொடுத்ததாக சொல்லும் அறிவிப்பை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. நில உடமை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பட்டா வழங்குவதற்கு முன்பாக சம்பந்தப்பட்டவர்களுக்கு எந்த அறிவிப்பும் சார்வு செய்யப்படவில்லை என்பதால்தான், நான் அந்த அறிவிப்பை தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால், சரியல்ல. நில உடமை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் தவறுலாக வழங்கப்பட்ட பட்டாவின் அடிப்படையில் நான் மோசடியாக ஏற்படுத்திக் கொண்டுள்ள வா.சா.ஆ.4 ஆவணத்தின் அடிப்படையில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளது சட்டப்படி நிலைக்கத்தக்கது அல்ல என்று சொன்னால், சரியல்ல.

3) வா.சா.ஆ.22 பிழைத்திருத்த ஆவணமானது நில உடமை மேம்பாட்டு திட்டத்தின்போது தவறுதலாக வழங்கப்பட்ட பட்டாவின் அடிப்படையில் பிழையான சொத்து விபரம் குறிப்பிட்டுள்ளதாவும், மேற்படி விபரம் பட்டா மாறுதல் செய்ய கிராம நிர்வாக அலுவலரிடம் சென்றபோது கண்டுபிடிக்கப்பட்டதின் அடிப்படையில் அனுபவத்தில் உள்ள சரியான புல எண்களை குறிப்பிட்டு எழுதப்படுவதாகவும்தான் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால், ஆவணத்தில் அவ்வாறுதான் எழுதப்பட்டுள்ளது, ஆனால் அது தவறான பத்திரமாகும். இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள பல ஆவணங்கள் 5ம் பிரதிவாதி இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு எண் 14/2014 வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களின் சான்றிட்ட நகல்கள்தான் என்றால், சரிதான். அசல் வழக்கு 14/2014ன் வழக்குரையின் சான்றிட்ட நகல்களையும், அந்த வழக்கில் நான் தாக்கல் செய்த எதிர் வழக்குரையின் சான்றிட்ட நகலையும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான்.

4) அசல் வழக்கு எண் 14/2014ல் வாதிகளாகிய நாங்கள் அனைவரும் தரப்பினர்கள் என்றால், சரிதான். அந்த வழக்கில் அழைப்பாணை கிடைக்கப்பெற்ற பின்பு அந்த வழக்கின் சாராம்சங்களை தெரிந்த கொண்ட பிறகுதான் இந்த வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. நான் இந்த வழக்கை 16.06.2014ம் தேதி தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரிதான். வா.சா.ஆ.21 முதல் 25 வரையிலான ஆவணங்கள் கடந்த 03.02.2014ம் தேதியில் அசல் வழக்கு 14/2014 வழக்கில் நகல் மனு தாக்கல் செய்யப்பட்டு, 27.02.2014ம் தேதியில் எனது அப்போதைய வழக்குரைஞர்

திரு கு. நாகப்பன் அவர்களால் வாங்கப்பட்டதாக உள்ளது என்றால், சரிதான். இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு 4 மாதங்களுக்கு முன்பாகவே வா.சா.ஆ.21 முதல் 25 வரையிலான ஆவணங்கள் பெறப்பட்டுள்ளது என்றால், சரிதான். அசல் வழக்கு எண் 14/2014 வழக்கு சமூகம் நீதிமன்றத்தில் இந்த வழக்கு சொத்து சம்பந்தமாக நிலுவையில் உள்ள விபரத்தை குறிப்பிட்டிருந்தாலும், மேற்படி அசல் வழக்கு 14/2014ன் வழக்குரையை இந்த வழக்கில் தாக்கல் செய்தாலும், இந்த வழக்கு கோப்பிற்கு எடுக்கப்படாது என்று உணர்ந்து, மேற்படி உண்மை சங்கதிகளை மறைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால், சரியல்ல.

ஒப்பம்/தங்கவேல்

ஒப்பம்/ திரு.ஆர்.ராதாகிருஷ்ணன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி